# ராஜீவ் - ஜே. ஆர். ரகஸிய பேச்சு

(டாக்கா)

இலங்கை ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் டாக்காவில் நேற்று முதற்தடவையாக இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் ராஜீவின் தகவல் செயலாளரான திரு. எம். சங்கர் ஐயர் இதனைத் தெரிவித்துள்ளார். இரு தலைவர்களதும் சந்திப்பு 'மெக்ன' ஆற்றில் படகொன்றில் இவர்கள் நேற்று உல்லாசப் பயணம் செய்தபோதுஇடம்பெற்றது. சுமார் நான்கு மணித்தியாலங்களாக 'ஒஸ்ரிச்' படகில் இவர்கள் பயணம் செய்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் சமர்ப்பித்த மாற்று யோசனைகள் பற்றி பாரதப் பிரதமர் இலங்கை ஜனதிபதியுடன் ஆலோசனை நடத்தியதாகவும், இது தொடர்பான விபரங்களை ஜனதிபதி விபரமாகக் கேட்டறிந்ததாகவும் பி.ரி.ஐ. செய்தியொன்று தெரிவித்துள்ளது. ஆனலும் மேலதிக விபரங்களைதனையும் இரு பகுதியினரும் வெளியிடவில்லை எனவும், இவர்களின் பேச்சுக்கள் மிகவும் ரகஸியமாகவே வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 9-12-85 திங்கள் (கார்த்திகை 24 ரபியு அவ் 26) முழக்கம் 304

★ ஓரிரு தினங்களில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ள —

# வடபகுதி விஜய அறிக்கையில் கண்காணிப்புக்குழு இருபிரிவு?

## நவம்பர் 4ம் திகதி இடம்பெற்ற கோட்டை சம்பவங்களையிட்டும் குழுவுக்குள் வேறுபாடு

(கொழும்பு)

கடந்த நவம்பா மாதம் 4ம் திகதி முதல் 6ம் திகதி வரை வடபகுதிக்கு விஜயம் செய்த யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு, தனது அறிக்கையை அடுத்த ஓரிரு தினங்களில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளது. இவ் அறிக்கையின் சில கருத்துக்களில் குழு உறுப்பினர்கள் சிலரிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

நேற்று நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் சில உறுப்பினர்கள் இது சம்பந்தமான தங்கள் கருத்துக்களைத் தெரிவித்ததாகவும், குழுவினல் தயாரிக்கப்பட்ட நகல் அறிக்கையில் ஒப்பமிட சம்பந்தப்பட்டவர்கள் மறுத்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதனல் குறிப்பிட்ட உறுப்பினர்கள் பிறிதான அறிக்கையொன்றைத் தங்கள் யாழ்ப்பாண விஜயம் தொடர்பாகச் சமர்ப்பிக்கலாமெனவும் தெரிய வந்துள்ளது.

நவம்பர் 4ம் திகதி, குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சமயம் கோட்டைக்குள்ளிருந்து ராணுவம் விசாரணை நடைபெறவிருந்த அசோக் ஹோட்டல் வரை வந்ததால், சாட்சியமளிக்க வந்தவர்சள் ஹோட்டலுக்குச் செல்ல முடியாத நிலையேற்பட்

... 6ம் பக்கம் பார்க்க

## நாளை துக்கதினம்!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தினமான நாளைய தினத்தை துக்க தினமாக தமிழ் மக்கள் அனுஷ்டிக்க வேண்டுமென அறவழிப் போராட்டக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத்தினத்தில், தமிழ் மக்கள் எவ்வித ஆடம்பர வைபவங்களையும் கொண்டாடாமல், வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள், அலுவலகங்கள், மற்றும் பொது நிறுவனங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமாறும் குழு வேண்டியுள்ளது.

இளைஞர், யுவதிகள், அலுவலக உத்தியோகத்தர்கள் தமது உடைகளில் கறுப்புப்பட்டி அணிந்து கொள்ளுமாறும், நாளாந்தக் கடமைகளை சிர்குலையாதவாறு இத்தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறும்அறவழிப் போராட்டக் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

## கருணநிதி கவலை

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை மேலும் மேலும் மோச

– 6ம் பககம் பார்க்க

## கோட்டை இராணுவத்தினர் பலாலி வீதி வழியாக ரோந்து

(எட்வர்ட் லியோன்)

நேற்றுப் பகல் இரண்டு மணியளவில் யாழ். கோட்டையிலிருந்து கால் நடையாகவும், கனரக வாகனங்களிலும் புறப்பட்ட ராணுவத்தினர் பலாலி வீதி வழியாகப் பலாலியை நோக்கிச் சென்றனர்.

இவர்கள் செல்லும் போது சிறிது பதற்ற நிலையைக் காணக்கூடியதாக இருந்தபோதும் வழமைபோல் மக்கள் பீதி கொண்டு ஓடவில்லை.

பின்னர் அதே ராணுவத்தினர் மாலை ஆறு மணியளவில் பலாலி வீதி வழியாக கவச வாகனங்களில் கோட்டையை நோக்கித் திரும்பிச் சென்றனர்.

பலாலி வீதியிலிருந்து யாழ். பஸ் நிலையம் வழியாக வந்த ராணுவ வாகனங்கள் ஆஸ்பத்திரி வீதியாகச் சென்று மணிக்கூட்டு வீதி வழியாக மீண்டும் கோட்டைக்குள் சென்றன.

## கரடியனறு பண்ணையில் 19 தமிழ் இளைஞர்கள் கைது!

மட்டக்களப்பிலுள்ள கரடியனறு பண்ணையை பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைத்துச் சோதனையிட்டதில் பத்தொன்பது இளைஞர்கள் கைதானதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இங்கிருந்து வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட மூன்று கண்ணிவெடிகள், மோட்டார் சைக்கிள், இராணுவச் சீருடைகள் உட்பட வேறு பல பொருட்களும் கைப்பற்றப்

... 6ம் பக்கம் பார்க்க

## கொழும்பிலிருந்து வந்த லொறியை மறித்து ஐந்து லட்சம் ரூபா பொருட்கள் கொள்ளை

(வண்ணார்பண்ணை)

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் யாழ்ப்பாணம் 'சலாம்' ரான்ஸ்போட் நிறுவனத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று பொதிகளுடன் முறிகண்டிக்கு அண்மையில் வந்துகொண்டிருந்தபோது ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத கோஷ்டியால் வழிமறிக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து அக்கராயன் குளத்திற்கு கடத்திச் செல்லப்பட்டு, அங்கு தயாராக நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'ட்ராக்டர்' ஒன்றில் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான டெலிவிஷன், டெக், கசெற், றேடியோக்கள் உட்பட வெளிநாடுகளிலிருந்து தொழில் புரிந்துவிட்டு வந்தவர்களின் பல பொதிகளும் ஏற்றப்பட்டனவாம்.

''நாங்கள் இப்போது வங்கிகளில் கொள்ளையடிக்க முடியாது; அதனல் தான் நாங்கள் முதலாளிகளிடம் கொள்ளையடிக்கின்றேம்'' என்று இளைஞர்கள் சாரதியிடம் கூறினர்களாம்.

... 6ம் பக்கம் பார்க்க

## கொள்ளைப்பணம் 18000ரூபா அதிகாரியே செலுத்தினர்!

கொள்ளைச் சம்பவமொன்றின்போது பணத்தைப் பறிகொடுத்த அரசாங்க அதிகாரியொருவர், அந்தப்பணம் முழுவதையும் தனது பணிக்கொடையிலிருந்து அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அண்மையில் சேவையிலிருந்தும் ஓய்வுபெற்ற யாழ். ஆஸ்பத்திரி மேலதிகச் செயலாளரான திரு. கே. நடராஜா என்பவரே இந்தப் பரிதாபத்துக்குரிய அதிகாரி.

கடந்தவருடம் ஆஸ்பத்திரி ஊழியர்களின் சம்பளப் பணத்தின் ஒருபகுதியான பதினெட்டாயிரம் ரூபா, குருநகர் வங்கியிலிருந்து இவரால் எடுத்து வரப்பட்ட போது கொள்ளை

... 6ம் பக்கம் பார்க்க

## கடலில் கேட்ட குண்டுச் சத்தம்

காரைநகர் கடலில் நேற்று நண் பகல் முதல் சில மணி

... 6ம் பக்கம் பார்க்க

### ஆசிரியர்கள் அதிருப்தியால்

## வெள்ள நிவாரணக் கடன் வழங்கல் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வெள்ள நிவாரணக் கடன் வழங்கும் விடயத்தில் கல்வி இலாகாவின் போக்குக்குறித்து ஆசிரியர்கள் தெரிவித்த அதிருப்தியை அடுத்து மேற்படி கடன் வழங்கும் நடவடிக்கைகள் உடனடியாக, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இவ் வெள்ள நிவாரணப்

...6ம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

### சைவபரிபாலன சபையின்

# நூற்றுண்டுபூர்த்திநினைவாக சைவ கலாச்சார மன்றம்

"சைவபரிபாலன சபையின் நூற்றண்டு பூர்த்திவிழாவிற்கு இன்னும் மூன்று ஆண்டுகளே இருக்கின்றன அதனைச் சிறப்பாகக் கொண்டாடும் முகமாக சைவகலாச்சார மண்டபம் அமைத்தல், சைவபரிபாலன சபை வரலாற்றுநூல் வெளியிடல் என்பன நடைபெறும்."

இவ்வாறு யாழ். சைவ பரிபாலன சபையின் 90வது வருடாந்தப்பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய சட்டத்தரணி திரு. சி. இராஜேந்திரம் தெரிவித்தார்.

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பிரகாசவித்தியாசாலையையும் அதனுடன் தொடர்புடைய தர்ம சொத்துக்களையும் நிர்வகிப்பதற்கு தர்மகர்த்தாவாக இலங்கைப் பிரஜையாக உள்ளவரும், சைவ சீலருமாகியஒருவரை நியமிக்க வேண்டும்" என்று திரு. மன்மதராஜன் அவர்களால் முன்மொழியப்பட்ட பிரேரணையும் இங்கு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதிய வருடத்திற்கான நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்:- சட்டத்தரணி சி. இராஜேந்திரன்; உபதலைவர்கள்:- திரு. இ. சபாலிங்கம்; திரு. நம. சிவப்பிரகாசம்; கௌரவ செயலாளர்:- திரு. த. சண்முகலிங்கம்; கௌரவ உதவிச் செயலாளர்கள்:- திரு. அ. சேனாதிராசா; திரு. இ. தங்கராசா: பொருளாளர்:- டாக்டர் வே. யோகநாதன்; பரீட்சைச் செயலாளர்:- திரு. வ. கந்தசாமி; சமயப்பிரச்சார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம்.

## மரக் கன்றுகள் விநியோகம்

(நயினாதீவு)

நயினாதீவைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் பண்டிதர் நா. கந்தசாமி அவர்கள் நிழல் மரங்களுக்கான தமது நாற்று மேடையிலிருந்து மரக் கன்றுகளை இலவசமாக விநியோகம் செய்து வருகின்றார். நயினாதீவில் மட்டுமல்லாமல் தீவுப் பகுதியின் எந்தப் பகுதியிலிருக்கும் பொது ஸ்தாபனங்களும் தமக்குத் தேவையான மலைவேம்பு, வேம்பு, மருது போன்ற நிழல் மரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆங்கில ஆசிரியர்களுக்கு விசேட சேவைப் பயிற்சி

(புங்குடுதீவு)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு, ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு ஆங்கிலம் பயிற்றவிருக்கும் ஆசிரியர்களுக்கென விசேட சேவைக் காலப்பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு யாழ்-கல்வித்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் ஆதரவுடன் நான்கு தினங்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

மானிப்பாய் வட்டாரப்பாடசாலை, ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ் வித்தியாலயத்திலும் காங்கேசன்துறை வட்டார ஆசிரியர்களுக்கான வகுப்பு தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கப் பள்ளியிலும் இம்மாதம் 11ம் திகதி முதல் 14 ம் திகதி வரை நடைபெறும்.

யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி வட்டாரப் பாடசாலை ஆசிரியர்களுக்கானவகுப்புக்கள் இம்மாதம் 17 ம் திகதி முதல் 20 ம் திகதி வரையும் வட்டுக்கோட்டை கோப்பாய் வட்டாரப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வகுப்புக்கள் இம்மாதம் 21ம் திகதி முதல் 24ம் திகதி வரையும் யாழ்- இந்து மகளிர் கல்லூரியில் நிகழும்.

ஏனைய கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ளன.

யாழ் பிரதேச ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. குலசேகரம் இதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டு வருகிறார்.

## சைவச் சிறுருக்கு அன்பளிபபு

திருநெல்வேலி சைவ அனாதைகள் இல்லத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கு புடவைவகைகள் வாங்குவதற்கென இலங்கை புகையிலைக் கம்பனி ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. மேற்படி கம்பனியின் விற்பனைப் பிரதிநிதி திரு. பி. அரியரத்தினம் இதற்கான காசோலையை சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகத்திடம் வழங்கினார்.

## விழிப்புக் குழு அமைக்கப்பட்டது

(சரசாலை)

சாவகச்சேரி நகரசபை பதினோராம் வட்டாரப் பகுதியில் விழிப்புக் குழு ஒன்று அமைக்கபபட்டுள்ளது.

இப்பகுதியின் பாதுகாப்பிற்காக இம்மாதம் முதலாம்திகதி முதல் விழிப்புக் குழுவினர் வீதித் தடைகளை அமைத்துச் செயற்பட ஆரம்பித்துள்ளார்கள்.

சந்தேகத்திற்கிடமான முறையில் யாராவது தமது பகுதிக்குள் நுழைய முற்பட்டால் கூக்குரலிட வேண்டுமெனவும், ஆலயங்களிலுள்ள மணிகள் இடைவிடாது அடிக்கப்பட வேண்டுமெனவும், அருகேயுள்ள காவல் நிலையத்திற்கும் உடனடியாக அறிவிக்கப்படவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதான சந்திகள் ஒவ்வொன்றிலும் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க




✻ பருத்தித்துறை ஓடக்கரை தங்கலிங்கம் சந்திரகுமாரி தம்பதியின் மகன் மேகவண்ணன் இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ குமரபுரம் எட்வேட் குணசீலி தம்பதியின் மகள் பிரதீபா இன்று தனது ஆறுவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✻ ஆனைப்பந்தி நடேசன் ஜெயலட்சுமி தம்பதியின் மகள் சயந்திரி இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ பாஷையூர் ரெட்ணதுரை தம்பதியின் மகள் லலி இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ ஆவரங்கால் வல்லிபுரம் சின்னம்மா தம்பதியின் மகன் தவச் செல்வன் இன்று தனது பதினோராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சண்டிலிப்பாய் ஐயனார் வீதி ஸ்ரீகாந்தன் பாமினி தம்பதியின் மகள் கௌசல்யா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ தும்பளை உடையார் ஒழுங்கை நவரத்தினராசா மீனலோசனி தம்பதியின் மகள் நிஷாந்திகா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ ஏழாலை சூராவத்தை யோகராசா லீலாதேவி தம்பதியின் மகன் பிரதீபன் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ ஊர்காவற்துறை கிழக்கு ராஜசேகரம் ஜசிந்தா தம்பதியின் மகள் நிருஷா இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

# நயினாதீவுமருத்துவமனையில் கடற்படையினர் சிரமதானம்

நாளை நடைபெறவுள்ள முப்பத்தொன்பதாவது வருடாந்த ஸ்ரீ லங்கா கடற்படைத் தினத்தை முன்னிட்டு காரைநகர் கடற்படைத் தளத்தைச் சேர்ந்த சுமார் நூறு கடற்படை வீரர்கள் கடந்த இரு தினங்களாக நயினாதீவு வைத்தியசாலையில் சிரமதான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை 'வளவினைத் துப்புரவு செய்ததுடன், பூமரங்களையும், நிழல் மரங்களையும் நட்டதுடன், வார்ட்டுகளில் உள்ள கட்டில்கள் தளபாடங்களுக்குத் தீந்தையும் பூசினர். முதல் நாள் நிகழ்ச்சிகள் யாவும் தொலைக்காட்சியில் படம் பிடிக்கப்பட்டன.

### பிரியாவிடை வைபவத்தில் பேச்சு:

# இறைபக்தியான கல்வியால் உயர்ந்த இடம் அடையலாம்

(கல்வியங்காடு)

"மாணவர்கள் முதலில் இறைவனிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். கடவுளை நம்பினோர் என்றும் கைவிடப் பட்டதில்லை. இறை பக்தியோடு கூடிய கல்வி வாழ்வில் உயர்ந்த இடத்தை அடையச் செய்யும். இறைவனிடம் நம்பிக்கை கொண்டு, பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து, பெரியோர்களுக்கு மதிப்பளித்து, ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கமாக வளரும் பிள்ளைகள் வருங்காலத்தில் பெரிய அறிஞர்களாகவும், ஆற்றலுள்ளவர்களாகவும், மகான்களாகவும் வரும் வாய்ப்புக்கள் உண்டு. இந்தப் பாடசாலையில்தான் நானும் எனது ஆரம்பக் கல்வியைப் பயின்றேன். என்னுடைய இன்றைய நல்ல நிலைக்கு எனது ஆரம்பக் கல்வி இங்கே சிறப்பாக இருந்தமை முக்கிய காரணமாகும்."

இவ்வாறு நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் ஆறும் ஆண்டு மாணவ மாணவிகளால் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வட பிராந்திய போக்கு வரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தெரிவித்தார். இவ் வைபவத்திற்கு அதிபர் திரு. பொ. நடராசா தலைமை வகித்தார்.

அதிபர் தமது தலைமையுரையில், தானும் இப் பாடசாலையிலேயே தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டதாகவும், இங்கேயே அதிபராப் பதவியேற்றதாகவும் தெரிவித்தார்.

ஆசிரியர் சி. கதிரவேலு, ஆசிரியை ம. வரதராசா ஆகியோரும் பேசினார்கள்.


## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

1986-ம் ஆண்டிற்கான முழு நேர தொழில் நுட்பப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறிகள்:-

1) மின்னொட்டு வேலை 2) மின்சார இணைப்பு வேலை
3) பிடவையும் உடை அமைத்தலும்
4) வானொலி திருத்துதல்

தகைமைகள்:-

1. எட்டாம் தரத்தில் சித்தி.
2. பாடசாலையை விட்டு விலகியோராக இருத்தல்
3. பதினைந்து வயதிற்குக் குறையாதவராக இருத்தல்

குறிப்பு: 1. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. கட்டிட வரைஞர் பாடநெறி ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தகைமை:- க.பொ.த. சாதாரணம்
3. ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை 20-12-1985 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

பூ. க. இராசரெத்தினம்
அதிபர்

4-12-85






மில்க்வைற் தயாரிப்புகளின்

## குறைக்கப்பட்ட புதிய விலைகள்:-

| | பழைய விலை ரூபா சதம் | புதிய விலை ரூபா சதம் |
|---|---|---|
| மில்க்வைற் நீல சோப் (100கிரு) | 2. 20 | 2. 00 |
| ,, பார் சோப் | 15. 00 | 14. 00 |
| ,, ½ பார் சோப் | 7. 50 | 7. 00 |
| ,, மினி பார் சோப் | 3. 75 | 3. 50 |
| [illegible] மில்க்வைற் சோப் | 6. 00 | 4. 75 |
| நியூ மில்க்வைற் சோப் | 3. 00 | 2. 50 |
| மில்க்வைச் சலவைப் பவுடர் (475 கிராம்) | 18. 00 | 17. 00 |
| மில்க்வைற் சலவைப் பவுடர் (140 கிராம்) | 6. 00 | 5. 75 |
| மில்க்வைற் சலவைப் பவுடர் (56 கிராம்) | 2. 50 | 2. 00 |
| நீம் வாசனை சோப் | 4. 00 | 4. 00 |
| மெடிக்கேட்டட் சோப் | 3. 00 | 3. 00 |

— மில்க்வைற் — யாழ்ப்பாணம்.



## வெளி நாட்டுப் பயணம்

உங்கள் பிரச்சினை என்ன?

ஏன் வீணாக யோசித்து அலைகின்றீர்கள்;

உடன் எம்மோடு உங்கள் பாஸ்போட்டோடு வந்து தொடர்பு கொள்ளவும்.

பின்வரும் நாடுகளுக்கு விசா எடுத்து, எமது அனுபவம் வாய்ந்த முகவர்கள் உங்களை அழைத்துச் சென்று விட்டுவிட்டு வருவார்கள்.

| | | |
|---|---|---|
| டென் மார்க் | -- பயணம் -- | 20 12-1985 |
| இத்தாலி | -- பயணம் -- | 20-12-1985 |
| பிஜி [தீவு] | -- பயணம் -- | 22-12-1985 |
| கனடா | -- பயணம் -- | 28-12-1985 |

C. E. C.

'முனீஸ்வர கபே, மேல் மாடி' சுன்னாகம்.

ஈழமுரசு
9 - 12 - 85


# "மின்சாரம் நல்ல நண்பன்; சில சமயம் எதிரியும் கூட"

## உதவி அரச அதிபர் மகாலிங்கம் பேச்சு:

(உடுவில்)

''ஒன்று பட்டால உண்டு வாழ்வு'' என்ற பழமொழிக்கிணங்க பொதுமக்கள் நீங்கள் ஒன்ருகச் சேர்ந்து களவாக மின்சாரம் பெறுபவர்களை எதிர்த்தால் நிச்சயமாக அவர்களின் செயலைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவிருக்கும். இந்த உப மின்நிலையம் இவ்வூர்மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இதைப்பாதுகாக்கவேண்டியது அவர்களது கடமையாகும். இந்நிலையம் அமைப்பதற்கு அதிகளவில் பல வழிகளிலும் உதவியளித்தவர் மாவட்டச் செயலாளர் திரு. எம். பஞ்சலிங்கம். அவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எல்லோர் சார்பாகவும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.''

இவ்வாறு சுன்னுகம் உப அலுவலகத்திஞல் அண்மையில் உடுவில் அம்பலவாணர் வீதியில் அமைக்கப்பட்ட புதிய உப மின்நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய யாழ். அபிவிருத்திசபை உதவிச் செயலாளர் திரு. பரமநாதன் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய அதிபர் திரு. பி எஸ். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சுன்னுகம் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. இராமலிங்கம் பேசுகையில் இவ்விடத்தில் ஒரு உப மின் நிலையம் அமைப்பதற்கென கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரே ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒன்றைய நிலைமைகளிஞல் உடனடியாகநிறைவேற்ற முடியவில்லை என்ருர்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிடுகையில்:- மின்சாரம் எமது நண்பன் அவனுடன் கவனமாக நடந்து கொள்ளாவிட்டால் எங்களைப் பலியாக்கி விடுவான். அண்மையில் ஏழாலையில் அனுமதியற்ற மின்வேலியால் ஐந்து மனித உயிர்கள் பலியாகின என்ருர். தொடர்ந்து மாவட்ட உதவிச் செயலாளர் திரு. பாலசிங்கம், மின் அத்தியட்சகர் திரு. நற்குண மாணிக்கம், முன்னுள் மாவட்ட சபை உறுப்பினர் டாக்டர் நடராசா ஆகியோரும் உரையாற்றினர்.

சுன்ஞகம் பிரஜைகள் குழு உறுப்பினர் திரு. சிவஞானம் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேகினர்.

## அகதிகள் முகாமுக்கு அன்பளிப்பு

(அரியாலை)

யாழ். புகையிரத நிலைய ஊழியர்கள் சங்கிலியன் புனர் வாழ்வுக்கழக அகதிகள் முகாமுக்கு ஒரு மூடை மா, இரு மூடை அரிசி, சீனி, மரக்கறி, கிழங்குவகை, தேங்காய் எண்ணெய் என்பனவற்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவ மன்றம் இரண்டு பெட்டி லக்டோஜன். இரண்டு பெட்டி நெஸ்பிறே, ஒரு பெட்டி அங்கர் மாவையும், 30 மீற்றர் துணியையும் அன்பளிப்புச் செய்துள்ளது.

யாழ்.லிங்கம்அன் கோவினர் மாணவர்களுக்காக 22 சிலேற்றுக்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

### மானிப்பாய் மெமோறியல் அதிபர் பேச்சு:

# ஆசிரியர்கள் பாடசாலைக்குப் பிந்திவந்து முந்திச் செல்கின்ருர்கள்!

(காரைநகர்)

"ஆசிரியர்கள் கடமையுணர்வுடனும் பொறுப்புடனும் செயற்பட்டாலே பாடசாலை வளர்ச்சியடைய முடியும். ஆசிரியர்கள் அலட்சிய மனப்பான்மையைத் தமது உள்ளத்திலிருந்து அகற்றிவிட வேண்டும். மனம் சலிக்காது சேவை மனப்பான்மையுடன் பணியாற்றும் ஆசிரிய உலகிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகவிளங்குபவர் திருமதி ப. திசைராசா. இவர் தனது நிர்வாகத் திறமையால் ஒரு அதிபரின் வேலைப் பளுவை வெகுவாகக் குறைக்கக்கூடிய ஆற்றல் நிறைந்தவர்.''

இவ்வாறு மானிப்பாய், மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கடமையாற்றி தனது 30 வருடகால ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிய திருமதி பண்டிதைநாயகி திசைராசாவுக்கு மெமொறியல் ஆங்கில பாடசாலையின் ஆசிரியர் 'நல்லுறவு மன்றம்' நடாத்திய பிரிவுபசார வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. வி. பொன்னுத்துரை குறிப்பிட்டார்.

ஆசிரிய நல்லுறவு மன்றத் தலைவர் திரு. எம். லோகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"இக்காலப் பெண்கள் கணவனுக்கு முன் தூங்கிப் பின் எழுவது போன்று சில ஆசிரியர்கள் பாடசாலைக்கு பிந்தி வந்து முந்திச் செல்கிருர்கள் ஆனல் திருமதி திசைராசா பாடசாலை ஆரம்பிப்பதற்கு அரைமணி நேரம் முன்னதாகவே வந்து பாடசாலை முடிவடைந்த பின்னரும் பாடசாலைக்கு வேண்டிய கடமைகளைச் செய்த பின்னரே வீட்டிற்குச் செல்வார் இவரது ஆற்றல் தனி மனித ஆற்றல் அல்ல: பல மனித ஆற்றல் படைத்தவர் ஆவர். இவர் வயதுக்கு முன் இளைப்பாறியது எமது பாடசாலைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.''

திருமதி பண்டிதைநாயகி திசைராசா தனது பதிலுரையில் கூறியதாவது;

எமது சமுதாயத்தில் உள்ள பிள்ளைகளை நல்லவர்களாக்க கல்வி புகட்டி வந்தேன் எனது சொந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சிறந்த முறையில் நிர்ணயிப்பதற்காகவே ஓய்வு பெற்றேன். இளைப் பாறினேன். ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறினுலும் தொடர்ந்தும் சமய சமூக நிறுவனங்களினூடாகப்பொது வாழ்விலும் சமூக சேவையிலும் ஈடுபடுவேன் எனக் குறிப்பிட்டார்.

உப. அதிபர் திருமதி ப. மகாதேவா, திரு. அ. மு. அருணுசலம், திரு. ஏ. நடராசா, கனிஷ்ட பிரிவு அதிபர் திரு. ஏ. ஜி. பெர்ஞன்டோ ஆகியோரும் உரையாற்றினர். ஆசிரியர் திரு. எஸ். சண்முகநாதன் நன்றி நவின்ருர்.

# யாழ். வை.எம்.சி.ஏ.நடத்தும் நான்கு நாள் பாசறை

(நல்லூர்)

யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தின் இருபதாவது வருடாந்தப் பாசறை டிசம்பர் மாதம் 9-ம் திகதி தொடக்கம் 12-ம் திகதி வரை யாழ் பரி. யோவான் கல்லூரி ஆரம்ப பாடசாலையில் நடைபெறவிருக்கிறது

இந்த நான்கு நாள் பாசறையில் ஏழாம் வருட மாணவ, மாணவிகள் தொடக்கம் பத்தாம் வருட மாணவ, மாணவிகள் வரை கலந்து கொள்ளவிருக்கிருர்கள்.

இந்தப் பாசறையில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளிடையே ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் பேச்சு, பாட்டு நாடகப் போட்டிகளும், விளையாட்டுக்களும் நடைபெறவிருக்கின்றன இதற்கான ஏற்பாடுகளை யாழ். வை. எம் சி ஏ. நிர்வாகச் செயலாளர் திரு. யே. என். பொன்னையா செய்துள்ளார்

## பரிதாப முடிவு

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இரத்தினம் (55 வயது) என்பவர் நேற்றுக் காலை தனது வீட்டிற்கு ஏற்படுத்தியிருந்த சட்ட விரோத மின்பாவனையைத் துண்டிக்கச் சென்றபோது மின் தாக்கி மரணமானுர். இவர் நீண்ட காலமாக இரத்த அழுத்த நோயால் பீடிக் கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.


# ஈராக் செல்ல விரும்புவோருக்கு ஓர் அறிவித்தல்

ஈராக் ஐக்கிய அரபுக் குடியரசு நாட்டிற்கு வேலைவாய்ப்புத் தேடி நண்பர்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பித்தவர்களுக்கு ஈராக் நாட்டு தொழில் அதிபரிஞல் விசா வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் பெயரும் பாஸ்போர்ட் நம்பர்களும் உடையவர்கள் பாஸ்போர்ட்டுடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு உடன் தொடர்பு கொள்ளவும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கதிரிதம்பி கதிரவேலு நவரத்தினம் | G 0396702 | 34. சிவராசா சிவலிங்கம் | G0156639 | 66. கமலன் சாந்தன் திருநாவுக்கரசு | H0125891 |
| 2. P. நவரத்தினராஜா | E 192683 | 35. P. வேதநாயகம் | G0344290 | 67. வேலுப்பிள்ளை கதிரவேலு சச்சிதானந்தம் | H0145633 |
| 3. லூயிஸ் இமானுவேல் புவனேந்திரன் | H 0010977 | 36. மரியதாஸ் ஜேசுதாஸன் | G0322965 | 68. ஞானமுத்து அலன் எட்றிசன் | G0395243 |
| 4. பேர்ச்சம் ஆர்தர் அரிவாசகம் | G 0345275 | 37. கிருஷ்ணராஜா கிருஷ்ணகுமார் | G0321781 | 69. சவிரிமுத்து அன்ரனிப்பிள்ளை செபராஜா | H0050754 |
| 5. சின்னப்பு நாகரத்தினம் இலிங்கேஸ்வரன் | H 0049087 | 38. கிருஷ்ணராஜா பத்மநாதன் | F340308 | 70. இராமு சின்னையா பன்னிருக்கரம் | H0150794 |
| 6. செபஸ்தியாம்பிள்ளை செபநாயகம் | G 0420570 | 39. அன்ரனி சொலமன் அமலதாஸன் | H0023203 | 71. அன்ரனிப்பிள்ளை ஞானசந்திரன் | H0036999 |
| 7. பிரான்சிஸ் ஜேம்ஸ் மகேந்திரன் | G 034275 | 40. பொன்னுத்துரை பிரபாகரன் | H0071936 | 72. சவிரிமுத்து அலெக்சான்டர் | G0210536 |
| 8. லிகோறி றெனின் குயின்ரஸ் | F 253804 | 41. F. A. யோகராசா | F271731 | 73. அன்டனிமுத்து புறுனோ அன்ரன் | G0410334 |
| 9. சபாரத்தினம் சாக்கிரடீஸ் | G 0092236 | 42. சுப்பையா சண்முகரட்னம் | G0395025 | 74. நாகமுத்து செல்லத்துரை | H0012398 |
| 10. எம் கே. இராமகிருஷ்ணன் | F 024251 | 43. சின்னராசா பிரபாகரன் | H0072309 | 75. இராம் பனிக்கர் கருணுகரன் | G0063748 |
| 11. முத்தர் சின்னத்துரை | F 346412 | 44. மைக்கல் அஞ்ஜலோ | F107727 | 76. தம்பாப்பிள்ளை கேதீஸ்வரநாதன் | H0319800 |
| 12. கபிரியேல்பிள்ளை செலஸ்ரைன் நிக்கலஸ் | G 0343571 | 45. ஞானப்பிரகாசம் இமானுவேல் வேதநாயகம் | F240193 | 77. புஷ்பராஜா செல்வசோதி | G0443467 |
| 13. யேசுதாசன் அன்செலம் தேவராஜ் | G 0405334 | 46. அன்ரனிப்பிள்ளை கொலம்பஸ் | H0053016 | 78. வேலுப்பிள்ளை விஞயகமூர்த்தி | G0484620 |
| 14. சுவாம்பிள்ளை கிறிஸ்டி றெவேந்திரா | G 0484557 | 47. கேபிரியல் லெஸ்லி | G0222981 | 79. ரட்னம் செல்வராஜா | G0395686 |
| 15. ஞானப்பிரகாசம் பேற்றி கலிஸ்ரஸ் | F 131880 | 48. சுவாம்பிள்ளை கேபிரியல் ரஞ்ஜிற் | H0103902 | 80. கந்தையா குணரட்னம் | G0395122 |
| 16. சோதிலிங்கம் பரந்தாமன் | H 0094585 | 49. அன்டன் மகிழ்ராஜ் | H0060088 | 81. சின்னத்துரை சந்திரமோகன் | G0194515 |
| 17. ஆஷ்மோர் பெலிசியன் வின்சென்ட் | H 0021215 | 50. அலோசியஸ் பீற்றர் றொபின்சன் | H0045791 | 82. சின்னத்துரை சின்னராஜா | G0172095 |
| 18. மயில்வாகனம் கதிர்காமநாதன் | F 025835 | 52. இராஜகோன் லெஸ்லி தேவராசா | H0106801 | 83. கந்தையா கதிரவேல் ஐயர் | F232057 |
| 19. பிரான்சிஸ் சேவியர் திரவியம் | F 081102 | 53. சைமன் விக்டர் | H0100921 | 84. ஞானபிரகாசம் கிங்ஸ்லி | G 0123509 |
| 20. D R. அலெக்சாண்டர் | F 156466 | 54. சின்னக்கிளி கந்தசாமி | F032831 | 85 இனசைமுத்து அந்தனிப்பிள்ளை | E 199872 |
| 21. யோசேப் அருளப்பு அமலதாஸ் | F 219049 | 55. இளையவன் தேவராசன் | F059642 | 86. A. கிளமென்ற் ஜெயராஜா | F 270177 |
| 22 இமானுவேல் கிளெமென்ட் சுரேஸ் | G 0164344 | 56. செல்லையா தர்மலிங்கம் | F318706 | 87. விக்டர் தவராஜா | F 204700 |
| 23. யோசேப் டெனிஸ் இராசையா | F 197215 | 57. முத்தையா கமலநாதன் | G0151771 | 88. ஆறுமுகம் தர்மகுலசிங்கம் | G 0320207 |
| 24. லோரன்ஸ் ஜெஸ்லெட் ஜொராட் | H 0015467 | 58. பிரகாசம் பிரான்ஸிஸ் சேவியர் | G0086503 | 89. நாகமுத்து தம்பிராஜா | G 0358392 |
| 25. அன்டன் யோகசிங்கம் ஜேம்ஸ் | Z 23213 | 59. அன்ரனிபிள்ளை அல்போன்ஸ் லிகிறே | H0096904 | 90. லிகோறி அலென் | H 0314525 |
| 26. ஜோய் ஜென்டிறிக் நிக்கலஸ் | H 0066668 | 60. பிள்ளையேந்திரன் யேசு ஜெயராசா | H0053834 | 91. தளையசிங்கம் பாலேந்திரம் | H 0334769 |
| 27 தம்பையா கிறிஸ்லோஸ் ஜெறோம் | G 0447546 | 61. யேசுநாயகம் றொசைறோ கன்யூட் சிறிதரன் | H0053371 | 92. தில்லையம்பலம் தளையசிங்கம் | G 0430968 |
| 28. செபஸ்தியாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை | F 294381 | 62. அல்பிறெட் பிலிப் இராஜயோகம் | G0342553 | 93. தில்லையம்பலம் தெய்வேந்திரன் | G 0238189 |
| 29. கணபதிப்பிள்ளை சின்ராம் மோகனதாஸ் | H 0051328 | 63. செபஸ்தியன்பிள்ளை யஸ்டின் ஜீவநாதன் | G0171233 | 94. மாணிக்கம் செல்வரட்னம் | H 0238189 |
| 30. இராசையா சிங்கராஜா பொன்ராஜா | F 238687 | 64. யேசுநாயகம் பிலிப்ட் மோகன்ராஜ் | G0412796 | 95. இரத்தினம் இராயேந்திரம் | H 0136394 |
| 31. சுந்தரம்பிள்ளை சிவராஜாசிபாலகுமார் | G0342586 | 65. தியோரனிஸ | G0343741 | 96. கார்திகேசு கிருபாகரன் | G 0206461 |
| 32 அன்ரனிப்பிள்ளை றேச் | F 026262 | | | 97. குழந்தை குணசிங்கம் | G 0271845 |
| 33. சிவராசா சிவதாஸன் | G0395114 | | | | |

முக்கியம்:- விண்ணப்பித்து - இதில் பெயர் இல்லாதவர்களும் உடன் பாஸ்போர்ட்டுடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். அவர்களின் விண்ணப்பங்களும் விசேஷமாக மறுபரிசீலனை செய்யப்படும்.

திருமதி S. பாலசிங்கம்
8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24791

Dyn. Ads

உதய சிந்தனை

திரு மனிதனுடைய கௌரவம் இருப்பது அவனது நா நுனியில்தான்
-பாரவிசேம்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

09-12-85 திங்கட்கிழமை (குரோதன கார்த்திகை-24

# ராஜீவ் சொல்வாரா? ஜே. ஆர். செய்வாரா?

உலகின் சனத்தொகையில் இருபது வீதமான மக்கள் தெற்காசியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

உலகின் முதற் பெண் பிரதமர் ஆட்சி புரிந்த இலங்கை தெற்காசியாவில் ஒரு முக்கிய நாடு.

உலக ஜனநாயகத்தின் காவலனாக விளங்கும் இந்தியா தெற்காசியாவில் ஒரு முக்கிய நாடு.

இந்து மன்னரின் ஆட்சி நடைபெற்றுவரும் ஒரேயொரு நாடான நேபாளமும் தெற்காசியாவில் ஒரு முக்கிய நாடு.

அணிசேரா நாடுகளுக்குத் தலைமைதாங்கிய இலங்கையும் இந்தியாவும் தெற்காசியாவில் இருப்பதால் இந்தப் பிராந்தியத்துக்குத் தனிப்பெருமையுண்டு

புத்தரும், காந்தியும் அவதரித்த புண்ணிய பூமியான பாரதம் தெற்காசியாவிற்குத் தலைமைதாங்கும் மிகப்பெரிய வல்லரசு.

இந்துமதமும், பௌத்தமதமும் தெற்காசியாவில் பிறந்தவை. இஸ்லாமிய மதத்தைப் பேணிவளர்க்கும் மூன்று நாடுகள் தெற்காசியாவிலுண்டு.

இவ்வாறு பல வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட தெற்காசியாவின் ஏழு நாடுகளும் தமக்கென தனியான ஒரு அமைப்பைக் கொண்டிருக்காத குறை இப்போது நீக்கப்பட்டு விட்டது.

அணிசேரா நாடுகள் அமைப்பு, காமன்வெல்த் அமைப்பு, தென்கிழக்காசிய நாடுகள் அமைப்பு, கொழும்புத்திட்ட அமைப்பு என்ற பல்வேறு சர்வதேசரீதியான அமைப்புக்களில் தெற்காசிய நாடுகள் அங்கம் வகித்து வருகின்றபோதிலும், இவை தமக்கென ஒரு தனியான அமைப்பை இதுவரை உருவாக்கவில்லை.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகளின் தலைவர்களும் சேர்ந்து, கடந்தவார இறுதியில் ''தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு மாநாட்டை'' (SARC) உருவாக்கியுள்ளமை சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

பாகிஸ்தானும் பங்களாதேஷும் பல வருடங்களாக இழுபறியில் இருந்து வருகின்றன.

இவ்விருநாடுகளுடனும் இந்தியா பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது.

இனப்பிரச்சினை தொடர்பாக, பல வேதனையான அனுபவங்களால், இலங்கையும் இந்தியாவும் கசப்புணர்வுடனேயே நேசக்கரம் நீட்டி வருகின்றன.

அமெரிக்க சார்பு, ரஷ்யசார்பு என்ற ''லேபலுடன்'', இந்த நாடுகள் ஆட்சி நடத்தி வருவது உலகறிந்த ரகசியம்,

இருப்பினும், தமக்கிடையேயுள்ள மனக் கசப்புகளையும் வேறுபாடுகளையும் ஒரு புறத்தே வைத்து விட்டு பங்களாதேஷில் தலைநகரான டாக்காவின் ஒரு மேசையின் முன்னால் ஏழுநாட்டுத் தலைவர்களும் ஒன்று கூடியதான சம்பவம் இப்பிராந்தியத்திலுள்ள மக்களிடையே நிரந்தர நிம்மதியை ஏற்படுத்தலாமென்ற நம்பிக்கையுணர்வை ஏற்படுத்துகின்றது.

''கூடினோம்; பேசினோம்; பிரிந்தோம்'' என்றில்லாமல் பரம்பரை பரம்பரையாக தெற்காசியப்பிராந்தியத்தின் ஒற்றுமைக்கும், பாதுகாப்புக்கும் புதிதாக உருவாகியுள்ள ''சார்க்'' வகிக்கப்போகும் பங்கு இந்தியாவின் கரங்களில்தான் தங்கியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன தமது ஆரம்பப் பேச்சில் இதனை மிக விளக்கமாக எடுத்துக்கூறியுள்ளார்.

தெற்காசிய நாடுகள் ஒன்றிணைந்தால் கூட, இந்தியா அவையனைத்திலும் பார்க்கப் பெரிய நாடு என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன சுட்டிக் காட்டியுள்ளார்.

''ராஜீவ் மீது முழுநம்பிக்கையும் எமக்குண்டு. அவர் எம்மை ஏகாதிபத்தியத்துக்குள்ளாக்கமாட்டார். நாம் என்ன செய்யவேண்டும், என்று அவர் கூற வேண்டும். அதற்கு செவிசாய்க்க வேண்டியது அங்கத்துவ நாடுகளான எமது கடமை'' என்றும் ஜனாதிபதி கூறியிருப்பது நுணுகிக் கவனிக்கப்படவேண்டியது.

முற்றிப்பழுத்த அரசியல்வாதியான ஜனாதிபதி ஜெயவர்த்தன, ஜனநாயக வல்லரசின் தலைவரான ராஜீவ்வின் ஆலோசனைகளைக் கேட்டு இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வருவாரா?

அதற்கான சரியான ஆலோசனையை ராஜீவ் வழங்குவாரா? இதுவே எமக்குள்ள முதற் பிரச்சினை; இதற்குத் தீர்வு கண்டால் ''சார்க்'' வளரவும், வாழவும் இடமிருக்கும்.

★ 'இன்டியா ருடே' பேட்டியில் ஜனாதிபதி பதில் —

# எவ்வளவு காலத்துக்குத்தான் கதைத்துக் கொண்டிருப்பது?

# ராணுவத் தீர்வுக்குத் தயார்!

வினா:- இணக்கப் பேச்சுக்களில் சிக்கல் இருப்பது சரியாக எங்கே எனச் சொல்வீர்களா?

விடை:- சில பிரதேசங்களைத் தமிழர் தாயகங்கள் என முதலில் வைத்துக்கொண்டு தமிழர் பிரதிநிதிகள் பேச்சுத் தொடர்கின்றனர். இலங்கைத் தீவு முழுவதும் தமிழர்களினது தாயகம் என அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதே போல, அது சிங்களவரினதும் கூட. அது ஒரே பூமி, ஒரே தேசம். தமிழருக்குள்ள பிரச்சினைகள் என்னவென்றுஎனக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை.

வினா:- அதிகாரங்கள் அவர்களுக்கும் உரித்தாதல் வேண்டும், பரவலாதல் வேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம். இந்திய மாநிலங்களில் உள்ளன போன்ற அதிகாரங்களை தமிழர்களுக்குக் கொடுப்பதில் ஏதாவது சிரமமா? உங்களுடைய சொந்த பாராளுமன்ற உறுப்பினராகிய விஜயானந்த தஹாநாயக்க அப்படிப்பட்ட ஓர் உருக்கமான ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறாரே.

விடை:- மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு அதிகாரங்கள் கொடுப்பதை நாம் பெரிதுபடுத்த மாட்டோம். ஆனால் சரியாக இந்திய அடிப்படையில் நாம் அப்படிச்செய்ய முடியாது இங்கிருப்பவர் நிறைவேற்று ஜனாதிபதி, உங்களிடம் அப்படியில்லை. தஹநாயக்க எமது நகல் திட்டத்தையோ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையோ வாசிக்கவில்லை.

வினா:- காலம் கடத்துவதற்காகவே உங்கள் அரசாங்கமும் போராளிகளும் யுத்த நிறுத்தத்தை உருவாக்கியதாகக் கூறுவது உண்மையா?

விடை:- ஆம், நாம் முன்பு தயாராக இருக்கவில்லை. தற்போது நாம் ஆயுதங்கள் வாங்கி எமது இராணுவத்தினரையும் பயிற்றுவிக்கிறோம். இணக்கப் பேச்சுக்களால் பயன் விளையாவிட்டால், வரவுள்ள தீர்க்கமான இராணுவ நடவடிக்கைக்கு நாம் தயாராகி வருகிறோம் இது பயங்கரவாதப் பிரச்சினையே தவிர, மனித இனங்களுக்கு இடையிலுள்ள பிரச்சினையல்ல எனஉலக அபிப்பிராயத்தை எம்பக்கம் திரட்டுவோம். இப்பேச்சுக்கள் எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு, மீண்டும் நாம் தாக்க வேண்டும் எனப் பலத்த ஓர் உணர்வு நிலவுகிறது.

வினா:- முன்னைய உங்கள் மிதவாத அணுகு முறையுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், நீங்கள் இப்போது மிகக் கடும் போக்கு உடையவராகிவிட்டீர்கள் போலத் தெரிகிறது.

விடை: எனது விருப்பம் எப்படித்தானிருந்தாலும், நிலவும் ஒரு பலத்த அபிப்பிராயத்தை நாம் பாராமுகமாக விட்டுவிடமுடியாது. எவ்வளவு காலந்தான் கதைத்துக் கொண்டு இருக்க முடியும்? அப்பாவி மக்களை அவர்கள் ஒவ்வொரு நாளும் கொன்றபடியாக இருக்கிறார்கள்

வினா: இராணுவ நடவடிக்கையினால் போராளி இயக்கத்தை முறியடிக்கலாம் என்ற திட நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

விடை: இராணுவ நடவடிக்கை இருந்துங்கூட சில பிரதேசங்களில், குறிப்பாகக் கிழக்கில், அவர்கள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். கடற்கரையிலிருந்து சிங்களவர்களை அவர்கள் விரட்டப்பார்க்கிறார்கள்.

வினா: ஆனால் உங்களுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்படுகிறதே. கிழக்கிலுள்ள இனவாரியான சமநிலையை மாற்றியமைத்தற்காக நீங்கள் இராணுவத்தையும் ஊர்காவற் படைகளையும் பயன்படுத்தித் தமிழர்களை அங்கிருந்து கலைத்து விடுகிறீர்களாமே? அப்படிச் செய்தால் வடக்கிற்கும் கிழக்கிற்கும் ஓர் இணைப்புக் கோரத் தமிழர்களுக்கு இயலாது போகச் செய்வது உங்கள் நோக்கம் போலும்.

விடை: தமிழ்ப் போராளிகளும் இதைத் தானே செய்து வருகின்றனர்? கிழக்கு மாகாணத்தை விட்டுச் சிங்களவர்களை அவர்கள் கலைத்து வெளியேற்றுகிறார்கள். நூற்றாண்டுகளாக அங்கு தங்கியிருந்த மக்கள் விரட்டி அகற்றப்பட்டுள்ளார்கள். கிழக்கில் உள்ளவர்களுக்கு வடக்கினோடு எதுவித இணைப்பும் உண்டாக்க விருப்பமில்லை. கிழக்கு எங்கள் பக்கமே உள்ளது. தற்போது கிழக்கிலுள்ள சனத்தொகை நிலைமை எமக்குச் சாதகமானது.

முதற்பகுதி வெள்ளிக்கிழமை வெளியானது. இது கடைசிப் பகுதி

வினா: அப்படியென்றால் இச்சண்டை சமரெல்லாம் எதற்கு?

விடை: அதையறிய எனக்கும் விருப்பம் தான். கிழக்கிலுள்ளவர்கள் ஈழத்திற்காக வாக்களிக்கவில்லை தமிழர்களிற் பெரும்பாலானவர்கள் ஈழத்திற்காக வாதாடவில்லை. 1977 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் தமிழர்களுக்குக் கொடுத்த எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றிவிட்டோம் தமிழ் ஒரு தேசிய மொழி ஆக்கப்பட வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். இன்று அது எமது அரசியலமைப்பில் இடம் பெறுகிறது. அதனையடுத்து சனத்தொகை விகிதாசார அடிப்படையில் குடியமர்வு கண்டு அதையும் நாம் செய்திருக்கிறோம். வடக்கில தமிழர்களையும் தெற்கில் சிங்களவர்களையும் நாம் குடியமர்த்தியுள்ளோம் ஆனால் இந்தப் பயங்கரவாதிகளுக்கு என்ன வேண்டுமாம்? அவர்களுக்கு ஈழம் வேண்டுமானால் ஏதாவது ஒன்றுடன் அவர்கள் இருத்தல் வேண்டும். பஞ்சாப்பில், அஸாமில், பீஹாரில் இந்தியப் பயங்கரவாதிகள் உள்ளனர். அர்த்தமற்ற அவர்களது நடவடிக்கைகளை உலகம் உணரவேண்டும் என நான் விரும்புகிறேன். பயங்கரவாதிகள் எனப்படுவோர் நோயாளிகள். சட்டவிரோதமான அவர்களது நடவடிக்கைகளுக்கு இனவாத 'லேபல்' பொருத்த அவர்கள் முயல்கின்றனர்.

வினா: தமிழ் மக்கள் ஈழம் வேண்டாமென்கிறார்கள் எனவும், அதனால் பயங்கரவாதிகளைக் குறைசொல்லுகிறார்கள் எனவும், நீங்கள் கூறுவீர்களானால், நீங்கள் இலங்கையின் வடக்கிற்குப் போய் மக்களோடு நேரில் கதைத்தாலென்ன?

விடை: நான் எப்படி அங்கே போக முடியும்? எமது அமைச்சர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களில் எவரொருவராவது அங்கு செல்ல முடியாது. நான் அங்கே போக முடியாதிருக்கிறேன் குண்டு துளைக்காத பெட்டிக்குள்ளிருந்து மாத்திரமே நான் போக முடியும்.

வினா: ஆனால் ராஜீவ் தமிழர்களை இணக்கப் பேச்சு மாநாட்டு மேசைக்குக் கொண்டுவந்து விட்டாரே.

விடை: ஆம், அவர்களுடன் அவர் பேச்சு நிகழ்த்துகிறார்.

வினா: பிரச்சினையைத் தீர்க்க இந்திய உதவியை நீங்கள் நம்பியிருக்கிறீர்கள் அதனையும், பாகிஸ்தான், இஸ்ரேல் போலும் தேசங்களிடமிருந்து நீங்கள இராணுவ உதவி நாடுவதை எப்படி ஒருங்கிணைத்துக் காண்பிக்க இருக்கிறீர்கள்?

விடை: எமது படையாட்கள், பயிற்சி உபகரணம் வழங்கப்பட வேண்டியவர்கள். அல்லாவிடில் அவர்கள் தொலைந்து போவார்கள். எனது படையாட்களைப் பயிற்சிக்கென இந்தியாவுக்கு அனுப்ப நான் சர்வசம்மதமாக இருக்கிறேன். இஸ்ரேலியர்கள் எமது நண்பர்கள். சர்வதேச அரசியலில் நான் சுதந்திர கருத்துக்களை உடையவன் இஸ்ரேலியர் எமது இராணுவத்தினரைப் பயிற்றுகின்றனர். குண்டு வெடிப்பால் கைகளை இழந்த எனது இராணுவத்தினரில் பத்துப் பேரை வைத்திய சிகிச்சைக்காக இஸ்ரேலுககு நான் அனுப்பியுள்ளேன்

வினா: ஆனால், இவ்வளவு பெருவாரியான ஆயுத அதிகரிப்பு எதற்காக?

விடை: நாம் இவை எல்லாவற்றையும் செய்வது எதற்காக என்றால், வெளியிலிருந்தும் நம் நாட்டின் உள்ளிருந்தும் பயமுறுத்தல்களை நாம் எதிர்நோக்குவதனாலேயே ஆகும். எமது நாட்டினுள் யாராவது படையெடுத்துவரலாம் என நாம் பயப்படுகிறோம். படையெடுப்பு எதனையும் எதிர்த்து நிற்க நாம் தயார்.

வினா; இப் படையெடுப்புப் பயம் எதைப் பற்றியது?

விடை: இந்திய அரசாங்கத்தையல்ல நான் கருவது ராஜீவ் காந்தி அப்படிச் செய்யமாட்டார் என்பது திண்ணம் இந்திய அரசாங்கம் விரும்பினால், இருபத்து நாலு மணித்தியாலங்களுள் அவர்கள் இலங்கையைக் கைப்பற்றி என்னையும் கைது செய்யலாம் ஆனால் அப்படி அவர்கள் விரும்பவில்லை என்பதை மனதார நான் அறிவேன். அது நடந்தால், சிங்களவர் மத்தியில் வசிக்கும் தமிழர் எல்லோரும் முடித்துக்கட்டப்பட்டு விடுவார்கள்.

வினா: 1985, நொவெம்பர் இரண்டாம் கிழமை 'சிற்றிஹோக்'கப்பலுடன் அமெரிக்க ஏழாம் கடற்படையின் வருகை பற்றிய அறிக்கையொன்று இருக்கிறதே?

விடை: நாம் அவர்களை அழைக்கவில்லை அவர்கள் தாமகவே வந்தனர். அவர்களுக்கு நாம் துறைமுக வாய்ப்புவசதிகள் கொடுத்தோம்.

வினா: இத்தீவின் பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக, பரவலாக உண்டாகிய பொருளாதார விளைவுகள் என்ன?

5 ம் பக்கம் பார்க்க

★ டாக்கா உச்சி மாநாட்டில் பாரதப் பிரதமர் உரை

# வறுமையை ஒழித்து வளர்ச்சியை பெருக்குவதே சார்க் அமைப்பின் நோக்கு!

(டாக்கா)

"சார்க், அமைப்பு வறுமையை ஒழித்து வளர்ச்சியைப் பெருக்கும் நோக்கிலானது. ஒரு சில நாடுகளின் அணுவாயுதச் செயற்பாட்டினால் வளரும் நாடுகள் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. பாரதத்திற்கு இந்நிலை கவலை தருகிறது" என்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி தென்காசியப் பிராந்திய நாடுகளின் 'சார்க்' மாநாட்டில் தெரிவித்தார்.

"இன்றைய காலகட்டத்தில் அமைதியும், உறுதிப்பாடும் மிகத் தேவையானவை" என்று அவர் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

பயங்கரவாதத்தை எதிர்க்க 'சார்க்' அமைப்பு உயர் நிலைக் கமிட்டி ஒன்றை உருவாக்குகிறது. இது கூட்டுக் கமிட்டியாகச் செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் அதிபர் லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்களுக்கு அரசு முறை விருந்தளித்துக் கௌரவித்தார்.

வறுமை, நோய், எழுத்தறிவின்மை அகற்றப்பட வேண்டுமென தலைவர்களின் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

நேபாள மன்னர் பிரேந்திரா தனது பேச்சில், பொருளாதார முன்னேற்றமும், சமூக அந்தஸ்தும் மேம்பட வேண்டியதன் அவசியம் பற்றி வற்புறுத்தினார்.

ஆற்றில் நான்கு மணி நேர உல்லாசப் பயணம் செய்யவும் தலைவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரு தரப்பு உறவுகள் பற்றி தலைவர்கள் மனம் திறந்து பேச இது ஒரு வாய்ப்பாகியது.

போதைவஸ்துக் கடத்தலைத் தடுப்பதற்கு மாநாட்டில் தனியான ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

மாநாட்டை ஒவ்வொரு வருடமும் நடத்துவது என்றும் அடுத்த மாநாட்டைப் புதுடில்லியிலும் அதற்கடுத்த மாநாட்டை திம்புவிலும் நடத்துவதென்றும் தீர்மானமாகியது.

சார்க் அமைப்புக்கு ஒரு தலைமையகம் தேவையென்றும் தீர்மானமாகியது. ஆனால் எங்கு அமைப்பது என்பது பற்றி தீர்மானிக்கப்படவில்லை.

இம்மாநாட்டுக்குப் பல உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

இந்த அமைப்புக்குத் தாமும் உதவத் தயாரென்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

இவ்வமைப்பு சமாதானச் சூழலை ஏற்படுத்தும் குறிப்பிட்டதோர் அம்சமாகும் என்று சீனப் பிரதமர் திரு. ஷியாங் கூறியுள்ளார்.

பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பைத் தமது தமது நாடும் ஆதரிப்பதாக அவுஸ்திரேலியப் பிரதமர் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானியப் பிரதமர் திரு. நாகஸோனே, ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலர் திரு. பெரஸ்டி குவெல்லர் முதலானோரும் தம் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர்.

## நாசம்

விழுப்புரத்தில் பெற்றோல் பௌஸர் ஒன்று விபத்தில் சிக்கித் தீப்பிடித்ததால் அது முற்றாக எரிந்து நாசமாகியது. சாரதியும் கொல்லப்பட்டார்.

எவ்வளவு ...

—4ஆம் பக்கத் தொடர்

விடை: நான் என்ன தான் செய்ய என்று கேட்கிறேன் அவர்கள் இலங்கை நாட்டைப் பணயமாக வைத்திருக்கிறார்கள் உலகம் முழுவதும் தமிழருக்காக மிகப் பலத்த ஆதரவு திரட்டப்படுகிறது. தற்போது படிப்படியாகத்தான் பல்வேறு அரசாங்கங்கள் எம் பக்கக் கருத்தையும் நயக்க ஆரம்பித்துள்ளனர். நாம் போய் அவர்களைச் சந்தித்து உள்ளபடியான நிலைமையை அவர்களுக்கு விளக்கியுள்ளோம்.

வினா: அதனையடுத்து அவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எப்படி இருக்கின்றன?

விடை: முன்னரைவிட, மேற்கு நாடுகளுடன் நாம் மிக நெருக்கமாக உள்ளோம். அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போலும் மேற்கு நாடுகளும், அவற்றுடன் யப்பானுங்கூட, எமது பிரச்சினையை உணர்ந்துகொண்டுள்ளதோடு, எங்கள் கருத்தேற்புகளுடனும் உடன்பாடாகியுள்ளனர். முன்னர் அவர்கள் இந்தியாவின் பக்கம் நின்றது வர்த்தக கட்டாயங்களை முன்னிட்டு ஆகும். இந்நாடுகளின் வெடிகுண்டுகளையும் விமானங்களையும்விற்க, எண்பது கோடி மக்களைக் கொண்டது ஒரு பெரும் சந்தை அல்லவா? இந்தியா கொள்வனவு செய்யும் போது ஒருவரும் ஒன்றும்பேச மாட்டார்கள். ஆனால் ஒரு நுளம்பளவு தானும் எதையாவது நாம் வாங்கினால்,ஓரே பெரும்களேபரமாகிவிடும். எமது பிரச்சினை ஒருபயங்கரவாதப்பிரச்சினையே தவிர, ஈழம் அல்ல என மேற்கு வல்லரசுகள் இப்பொழுது முழுமனமார நம்பியுள்ளன. ஈழம் எப்போதோ கைவிடப்பட்டு விட்டது. வன்முறைகள் வாயிலாக இந்நாட்டில் அதிகாரத்தைக் கைப்பற்றுதற்கான மிகப் பெரிய மார்க்ஸிஸ-லெனினிஸ சதித்திட்டமே அது.

வினா: படுமோசமான ஒன்றுக்கு நீங்கள் தயாராகிக் கொண்டு இருக்கிறீர்களா?

விடை: யாழ்ப்பாணத்தைச்

—6ஆம் பக்கம் பார்க்க

மீனவர் பிரச்சினை; வைஜயந்திமாலா எம். பி. கோரிக்கை

# பிரதமர் நிவாரண நிதி மூலம் உடனடி உதவி தேவை

(சென்னை)

தமிழக அரசு மெரினாக் கடற்கரையை எழிலூட்டும் நடவடிக்கையாக மீனவரிடம் இருந்து கைப்பற்றிய கட்டு மரங்களை நேற்று அவர்களிடையே மீளக் கையளித்தது. இதற்கான உத்தரவை தமிழக சுப்ரீம் கோர்ட் விடுத்திருந்தது.

மீனவர் மீதான துப்பாக்கிச் சூட்டு நடவடிக்கையை ஆட்சேபித்துத் தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் உண்ணாவிரதமும் அனுஷ்டித்தது.

பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குமாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. எம். பழனியாண்டி தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதே வேளை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி தன் நிவாரண நிதியிலிருந்து உடன் நிதியுதவி வழங்க வேண்டும் என்று திருமதி வைஜயந்திமாலா பாலி எம். பி. தந்தி மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தெஹ்ரானில் கார்க்குண்டு வெடிப்பு; உரிமை எவருமில்லை

(தெஹ்ரான்)

ஈரானியத் தலைநகர் தெஹ்ரானில் கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

எனினும் இச்சம்பவத்திற்கு எந்த ஸ்தாபனமும் இதுவரை உரிமை கோரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தினால் விளைந்த விளைவுகள் பற்றிய தகவலும் கிடைக்கவில்லை.

# காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி பெங்களூரில் ஆலோசனை!

(பெங்களூர்)

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து கர்னாடகத் தலைநகர் பெங்களூரில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அடுத்த வாரம் இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்றைப் புதுடில்லியில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாரதப் பிரதமரால்

# கூட்டணியினரின் யோசனை ஜே. ஆரிடம் எடுத்துரைப்பு

(டாக்கா)

தென்காசியப் பிராந்திய நாடுகளின் 'சார்க்' அமைப்பு உச்சி மாநாட்டில் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் எவரது உதவியுமின்றியே இலங்கை இனப் பிரச்சினை குறித்து ஆராய்ந்ததாக நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமர்ப்பித்த புதிய மாற்று யோசனைகளை திரு. காந்தி ஜெயவர்த்தனாவிடம் எடுத்துரைத்தார்.

இலங்கை இனப் பிரச்சினை குறித்தும், கூட்டணியினரின் புதிய மாற்று யோசனைகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்த தகவலை திரு. காந்தியின் அலுவலக அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.



எனினும் மேற்கொண்டு விபரம் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை.

பாரதப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் இனப்பிரச்சினையில் அரசியல்தீர்வு ஒன்று காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலுவாக வலியுறுத்தியதாகவும் தெரியவருகிறது.



11-ல் பாரதியின் 104-வது ஜனனதினம்

# பாரதத் தலைநகரில் சிலை அமைகிறது தமிழ்நாடு அரசாங்கம் அனுப்புகிறது

(புதுடில்லி)

புதுடில்லியில் மகாகவிபாரதியாரின் சிலை ஒன்றினை அமைக்க மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நகர வளர்ச்சிக் கழகத்துக்குப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

புதுடில்லியில் இதற்கென ஓர் இடத்தை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

பாரதி சிலையைத் தமிழக அரசு வழங்கவுள்ளது இம்மாதம் பதினோராம் திகதி பாரதியின் நூற்றுநான்காவது ஜனனதினம் என்பது குறிப்பிடத் தக்கது.

மத்திய ஐரோப்பிய பயங்கரவாதம்

# பிரிட்டனில் பலர் புகலிடம் பெற முனைவதாக அறிவிப்பு

(லண்டன்)

மத்திய ஐரோப்பாவில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோரில் பலர் பிரிட்டனில் பிரவேசம் செய்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளதாக சண்டே டைம்ஸ்வெளியிட்டுள்ளசெய்தி ஒன்றில் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதக் குற்றச் சாட்டின் பேரில் வெளிநாடுகளில் தேடப் படுவோரில் மூன்றிலொரு பகுதியினர் மீது எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும் இச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே பிரிட்டன் நாடுகடத்தல் தொடர்பான தனது கடும்போக்கைத் தளர்த்துக் கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் பிரிட்டன் வெளியாரை அவரவர் சொந்த நாட்டிற்கு அனுப்புவதான சட்டவிதிகளை தளர்த்திக் கொள்ளவுள்ளதாகவும் தகவல் எட்டியுள்ளது.

## அண்ணா பல்கலைக் கழகம் வென்றது

(சென்னை)

தென்மண்டலப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான டேபிள் டெனிஸ் ஆண்கள் பிரிவுப்போட்டியில் சென்னைப் பல்கலைக் கழகத்தை அண்ணா பல்கலைக் கழகம் 5 – 3 என்ற ஸ்கோர் கணக்கில் வென்றது.

## பொலிஸார் படுகொலை

(லண்டன்)

வட அயர்லாந்தில் ஐரிஷ் கெரில்லாக்களால் இரு பொலிஸார் கொல்லப்பட்டும், மூவர் காயமடைந்துமுள்ளனர்.

9.12.85 திங்கட்கிழமை

ஈழமுரசு

பெற்றோர்கள் புகார் செய்கின்றனர்:

# உள்ளூர் தொலைக்காட்சி ஒளிபரப்புகளினால்
# தமிழ் மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ள தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் பற்றி ஆசிரியர்களும், பெற்றோர்களும் பெரிதும் கவலை தெரிவித்துள்ளார்கள்:

ஜி.சி.ஈ. பரீட்சை இப்பொழுது நடைபெறுவதால் பரீட்சை நடைபெறும் தினங்களிலும் மாணவர்கள் பரீட்சைக்கு ஆயுத்தம் செய்து கொண்டிருக்கும் போதும் இவ் ஒளிபரப்புச் சேவைகளை தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டுமென இவ்விடயத்தில் அக்கறை செலுத்திய சில இளைஞர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

எனினும் இவ் ஒளிபரப்புக்களை நடத்துபவர்களில் பெரும்பாலானவர்கள் இவ் வேண்டுகோளை ஏற்று நடந்துகொள்ளவில்லை. இதனால் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த மாணவர்களுக்கும் பெரிதும் தடங்கலேற்பட்டது.

மேலும் சாதாரண தினங்களிலும் கூட வெள்ளி, சனி ஆகிய தினங்களில் மட்டுமே தொலைக்காட்சி ஒளிபரப்புக்களை மாணவர்களைப் பாதிக்காத வகையில் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையும் முறையாக அமுல் செய்யப்படவில்லை.

எனவே தமிழ் மாணவர்களின்கல்விமுன்னேற்றத்திலும் தரமற்ற தென் இந்தியப் படங்களின் பாதிப்புக்கள் மாணவர்கள் மத்தியில் ஏற்படக் கூடாது என்பதிலும் அக்கறை கொண்டுள்ள அமைப்புக்கள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு இவற்றை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்று பொறுப்புள்ள ஆசிரியர்களும் பெற்றோர்களும் கேட்கிறார்கள்.

## மூளைக்காய்ச்சல் 11 பேர் மரணம்

அனுராதபுர மாவட்டத்தில் நேற்றுவரை பதினொரு பேர் மூளைக்காய்ச்சலால் மரணமாகியுள்ளனர். நுளம்பினால் பரவும் இந்த நோய் "ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பி" என்று டாக்டர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் நூறு பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டு அனுராதபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## லலித் வடமத்திய மாகாண விஜயம்

(மின்னேரியா)

தேசிய பந்தோபஸ்து மந்திரி லலித் அத்துலத் முதலி நேற்று வடமத்திய மாகாணத்துக்கு விஜயம் செய்து பந்தோபஸ்து நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டார்.

## மேலும் அகதிகள்

(அரியாலை)

மூதூரில் இருந்து மேலும் 3 குடும்பங்களைச் சேர்ந்த 11 அகதிகள் கடந்த 5ம் திகதி நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகள் முகாமுக்கு வந்துள்ளனர்.

## சுமைதி, சாந்தி வேண்டி கல்வயலில் மகாயாகம்

(சாவகச்சேரி)

தமிழினத்தின் சுபீட்சத்திற்காகவும், நாட்டில் அமைதியும், சாந்தியும், ஒற்றுமையும், நிலவவும், இன்றைய துயர் நிலை நீங்கி சகல நன்மைகளும் பெருகுவதற்காகவும் சாவகச்சேரி, கல்வயல் பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சாந்தி மஹா யாகம் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் இச் சாந்தி மஹா யாகத்தை சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் பிரதம சிவாச்சார்யராக இருந்து நடத்தி வைப்பார்.

மக்களின் நலன் கருதி நடைபெறும் இச் சாந்தி மஹா யாகம் சாவகச்சேரியில் இரண்டாவதாகு

## மரண அறிவித்தல்

### திருமதி சீதேவிபிள்ளை இளையதம்பி

கோவிலாக்கண்டி மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு க. இளையதம்பி அவர்களின் அன்பு மனைவியார் திருமதி. சீதேவிப்பிள்ளை இளையதம்பி காலமாகி விட்டார். இவர் திரு. கனகசபாபதி (தொழிற்சாலை அதிகாரி தலவாக்கொலை லோகி அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்) திரு. சாம்பசிவம் (கணக்காளர் Papua New Guinea) திருமதி சிவபாக்கியம் இராஜகோபால் (ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி) திரு. சிவானந்தன் (வட்டார கல்வி அதிகாரி கல்வித்திணைக்களம் மல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ஞானமணி கனகசபாபதி, திருமதி இராஜபூபதி சாம்பசிவம் (Papua New Guinea), திரு. மு. இராஜகோபால் (நிர்வாக அதிகாரி, Hawaii) திருமதி இந்திரகுமாரி சிவானந்தன் (ஆசிரியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபாஷினி சுதேசன், சுதர்ஷன், சுகந்தினி, சுமதி, ராஜமுகன், சுகிந்திரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரிகைகள் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் 9-12-85 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணி அளவில் நடைபெற்று திருநெல்வேலி மயானத்திற்கு பிற்பகல் 4-00 மணி அளவில் தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 9-12-1985 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23386

## கரடியனாறு...

பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளையில் கடந்த வியாழக்கிழமை ஏறாவூரில் கைதான இளைஞர் ஒருவர் சைனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## கருணாநிதி ....

மடைந்து வருவதாக தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி கவலை தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## கடலில் கேட்ட....

நேரமாக கேட்ட குண்டுச் சத்தங்களால் அப்பகுதியில் சிறிது பதற்றம் நிலவியது. கடற்படையினரின் பீரங்கிப் படகு ஒன்றிலிருந்தே இவ் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாம்.

## வடபகுதி....

டது தெரிந்ததே.

அன்று பிற்பகல் சில குழு உறுப்பினர்கள் பாதுகாப்பு எதுவுமின்றி விசாரணை மண்டபத்துக்குச் சென்றனர். பின்னர் மற்றைய உறுப்பினர்கள் ராணுவ பாதுகாப்புடன் மண்டபதுக்குச் சென்று விட்டுத் திரும்பினர்.

இது தொடர்பாகவே குழு அறிக்கையில் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## கொள்ளைப் பணம்...

யடிக்கப்பட்டது.

அண்மையில் ஓய்வுபெற்ற இவருக்கு வழங்கப்படவேண்டிய சேவைக்காலப் பணிக்கொடை நிதியிலிருந்து குறிப்பிட்ட பதினெட்டாயிரம் ரூபா கழிக்கப்பட்டு மிகுதிப் பணமே வழங்கப்பட்டுள்ளது.

## மட்டுநகர், திருமலை கடத்தல் கொள்ளைச் சம்பவங்கள்

மட்டக்களப்பில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றில் இருநூறு உரப்பைகளுடனும், இரண்டாயிரத்து ஐநூறு ரூபா பணத்துடனும் சென்றுகொண்டிருந்த 'ட்ரக்' ஒன்று அம்பலாந்துறை என்ற இடத்தில் கடத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இந்த 'ட்ரக்' பின்னர் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவை தெரிவித்தன.

ஆயுதம்தாங்கிய இருபது பேர் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சவளக்கடை என்ற இடத்தில் நெற்களஞ்சியம் ஒன்றை உடைத்து ஒருலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக நேற்றுப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் நீரிறைக்கும் இயந்திரம், தொலைபேசிக் கருவி, இரண்டு அலுமாரிகள், இரண்டு சுவர்க்கடிகாரங்கள், சாக்குகள் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஆயுதம் தாங்கிய இருபது பேர் கொம்பனியொன்றுக்குச் சொந்தமான ஜீப்பைக் கடத்திச் சென்றுள்ளதாகநேற்றுப்பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

## பரஸ்பர நல்லுறவு வளர 'சோவியத் நாடு' உதவும்!

"சோவியத் நாடு சஞ்சிகை, இலங்கைக்கும் சோவியத் சோசலிச ஒன்றியத்திற்குமிடையே பரஸ்பர நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் உருவாக்க உதவுகின்றது. அங்கு நிகழ்ந்துள்ள சமூக பொருளாதார மாற்றங்கள் மூன்றாம் உலக நாடுகளில் வாழும் எண்ணற்ற மக்களுக்கு ஒளி விளக்காக அமைந்துள்ளது."

இவ்வாறு யாழ்நகரில் நடைபெற்ற சோவியத் நாடு வாசகர் வட்டத்தின் முதலாவது ஆண்டுக் கூட்டத்தில் பேசிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் கூறினார்.

வாசகர் வட்டத் தலைவர் திரு. பொன்- சூரியகாந்தன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கலாநிதி சோ. கிருஷ்ணராசா பேசும் போது, சோவியத் இலங்கை மக்களிடையேயான நட்புறவை வளர்ப்பதற்கும் இவ்வாசகர் வட்டம் பெரும்பணியாற்றி வருகிறது. 83ம் ஆண்டிலேயே திரு. சாந்தன் ஆரம்பித்த ருஷ்யமொழி வகுப்பு பயனுள்ளதாக அமைந்துள்ளது எனக்குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் ஐ சாந்தன், அ. வயிரவிலிங்கம் உட்பட பலர் உரை நிகழ்த்தினார்கள் திரு. ஐ. சாந்தன் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். ருஷ்ய மொழி வகுப்பு தொடர்ந்து நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஆசிரியர்கள்...

பணத்தை கல்விக் கந்தோர் ஊழியர்கள் பலர் முதலில் பெற்றுக்கொள்ள முயற்சித்ததாகவும் இதுபற்றிப் பாடசாலைகளுக்கு எவ்வித விபரங்களையும் அறிவிக்காமல் இருந்ததாலேயே ஆசிரியர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து நிவாரணக் கடன் மாதிரிப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிய பின்பே ஊழியர்களுக்கான கடன் காசோலைகள் எழுதப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## கொழும்பிலி....

லொறிச் சாரதி, உங்களுக்குப் பணம் தேவையானால் முதலாளியிடம் வந்து கேட்டு வாங்குங்கள் எனக் கூறினாராம். அவர்கள் அதற்கு மறுத்துவிட்டு ட்ராக்டரில் பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை மூன்று மணிக்கே லொறியை கடத்தியவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதித்தனர் என்றும் அறிய வந்துள்ளது.

## ஓய்வு பெற்றார்

கடந்த 39 வருடங்களாக நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் ஆசிரியராகவும், உபஅதிபராகவும கடமையாற்றிய செல்வி நல்லபிள்ளை நாகமுத்து ஓய்வு பெற்றுள்ளார்.

## எவ்வளவு....

...5ஆம் பக்கத் தொடர்

சாடுதற்கு நான் பூரண தயாராகவில்லை. மற்றைய மாகாணங்களின் அலுவலை முதலில் முடிக்க நான் விரும்புகிறேன். யாழ்ப்பாணத்தைக் கையாள்வது கடினமல்ல. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான உணவையும் ஏனைய வழங்கல்களையும் நிறுத்திவிட்டு, ஒரு மாதகாலத்தினுள் பயங்கரவாதிகளை விரண்டு வெளிவரச் செய்யலாம். ஆனால் இந்தியா எம் செயலை ஆதரிக்குமா?

வினா: காலக் கிரமத்தில், இலங்கைத் தீவிற்கு மீண்டும் சமாதானம் எப்பொழுது வரும் என நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள்?

விடை: பொறுத்திருந்து பார்ப்போமே. அடுத்த ஆண்டு ஓரளவு சாதாரண நிலைமையைக் கொண்டுவரலாம்.

(முற்றும்)

## மீன் பிடிக்கச் சென்றவர்கள் கடலில் வைத்து தாக்கப்பட்டனர்

(குருநகர்)

குருநகரைச் சேர்ந்த இயந்திரப்படகில் சென்ற கடற்றொழிலாளர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டதுடன், இயந்திரப்படகும் சிறிது சேதத்திற்குள்ளானதாகத் தெரிய வந்துள்ளது. நேற்றுக் காலை ஆழ்கடலில் தொழிற் செய்வதற்காகக் குருநகரில் இருந்து ஆறு தொழிலாளர்களுடன் சென்ற இயந்திரப் படகை நெடுந்தீவுக்கு அண்மையில் வைத்து வழி மறித்துச் சோதனையில் ஈடுபட்ட கடற்படையினர், தொழிலாளர்களை நையப் புடைத்ததுடன், இயந்திரப் படகையும் சேதத்திற்கு உள்ளாக்கித் திருப்பி அனுப்பி வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.